ஒரு சம்பவம் என்பது நேற்று; அது சரித்திரம் என்பது இன்று, அது சாதனையாவது நாளை. (மேசையைத் தட்டும் ஒலி) வந்த சோதனைகள் இடைவேளை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில், அம்மையார்குப்பம், ஆர்.கே. பேட்டை, வங்கனூர் பகுதிகளில் இருக்கின்ற மக்கள் 90 சதவீதத்திற்குமேல் கைத்தறியை நம்பியே வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, அந்தப் பகுதிகளிலே . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கின்றார். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கேள்வி கேட்கிறார், உட்காருங்கள்.

திரு. மு. அருண் சுப்பிரமணியன்: அந்தப் பகுதிகளில் விசைத்தறிப் பூங்கா அமைக்க அரசு மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் மூலக் கேள்வி கேட்டிருக்கின்றார். (குறுக்கீடு) மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அவர் குற்றச்சாட்டு ஒன்றும் சொல்லவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

முற்பகல் 11-10

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அருண் சுப்பிரமணியன் அவர்கள் நல்ல இடத்தில் வந்து சேர்ந்து விட்டோம் என்ற பூரிப்பில் உரையாற்றிக்கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர், சகோதரர் திரு. பெரியகருப்பன் அவர்கள் படுதோல்வி அடைந்து விட்டோம் என்ற விரக்தியில் உரையாற்றிக்கொண்டிருக்கின்றார். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு தே.மு.தி.க. உறுப்பினர்கள் பாரதிய ஜனதாவோடு கூட்டணி, கூட்டணி என்று

2015 பிப்ரவரி 18]

உள்ளடி வேலை பார்த்துக்கொண்டு இங்கே அமர்ந்திருக்கக்கூடியவர்கள், எப்போதுமே ** இப்படி அவர் உண்மையைக் கூறும்போது எழுந்து நின்று (குறுக்கீடுகள்) இங்கே சட்டப் பேரவையிலே அமர்க்களம் செய்து கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறார், உட்காருங்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணி இல்லையென்றால் நீங்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக வந்திருக்கவே முடியாது. (குறுக்கீடுகள்)

(தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லாமல் இப்படி நீங்கள் அனைவரும் எழுந்து நிற்கக்கூடாது. (குறுக்கீடுகள்) இப்படி நீங்கள் எல்லோரும் எழுந்து நின்றால் எப்படி? (குறுக்கீடுகள்) இப்படி எழுந்து நின்றால் எப்படி? (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் நீங்கள் பேசுகிறீர்கள், மற்றவர்கள் எழுந்து நின்றால் எப்படி? (குறுக்கீடுகள்) உங்கள் கட்சி உறுப்பினர்களை உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சி உறுப்பினர்களை உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: கொஞ்சம் பொறுமையாக இருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்தில், நேரடியாக கேள்விக்கான பதிலை மட்டும் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள், (குறுக்கீடுகள்) நான் பேசுகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் பேசுகிறேன். உட்காருங்கள் என்றால் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) யாராவது ஒருவர் பேசுங்கள். இப்படி எல்லோரும் எழுந்து நின்று பேசினால் எப்படி? (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசிக்கொண்டிருக்கிறார். மற்ற உறுப்பினர்களும் பேசினால் எப்படி? (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசும்பொழுது, எல்லோரும் எழுந்து நின்று பேசினால் எப்படி? (குறுக்கீடுகள்) மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் 59 உள்ளன. அவற்றில் 6,796 உறுப்பினர்கள் உள்ளனர். விசைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் 34 உள்ளன. அவற்றில் 1,179 உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் மொத்தம் 7,975 உறுப்பினர்கள் உள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: ஒரே ஒரு நிமிடம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் அவர்கள் பேசியதில் குற்றச்சாட்டுகள். (குறுக்கீடுகள்)

2015 பிப்ரவரி 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. நீங்கள் உங்கள் இடத்திற்குப் போங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசியதில் குற்றச்சாட்டுகள் ஏதாவது இருந்தால், அதனை ஆய்வுசெய்து, குற்றச்சாட்டுகள் இருக்குமாயின், ஆட்சேபகரமான பகுதி இருந்தால் அதனை வேண்டுமானால் எடுத்துவிடலாம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) இல்லை, நீங்கள் சொன்னது பற்றி அவைக் குறிப்பினைப் பார்த்துவிட்டு பிறகு நான் முடிவு சொல்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள், நீங்கள். (குறுக்கீடு) அவைக் குறிப்பினைப் பார்த்துவிட்டு நான் முடிவு சொல்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் ஒரு வார்த்தை சொல்லியிருக்கிறீர்கள். அந்த வார்த்தை அவைக் குறிப்பில் பதிவாகி இருக்கிறதா என்று நான் பார்க்கிறேன். (குறுக்கீடுகள்) இருந்தால் அதைப்பற்றி நான் முடிவு எடுக்கிறேன். (குறுக்கீடுகள்) குற்றம் சாட்டுகிற மாதிரி இருந்தால் அதை நான் எடுத்து விடுகிறேன். (குறுக்கீடுகள்) உங்களைக் குற்றம் சாட்டுகிற மாதிரி இருந்தால் அதை நான் எடுத்து விடுகிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. குற்றம் சாட்டுகிற மாதிரி இருந்தால் அதை நான் எடுத்து விடுகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அது என்ன என்று அவைக் குறிப்பை நான் பார்க்க வேண்டும். அவைக் குறிப்பை பார்க்காமல் நீங்கள் சொன்னவுடன் நான் எடுக்க முடியாது. (குறுக்கீடுகள்) இல்லை, (குறுக்கீடுகள்) பேசுவதை நீங்கள் புரிந்துகொள்கிறீர்களா? (குறுக்கீடுகள்) நான் அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டு அதுமாதிரி இருந்தது என்றால் நீக்குகிறேன். (குறுக்கீடுகள்) நான் பார்க்கிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

முற்பகல் 11-15

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் பேசுகிறார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் பேசுகிறார். Speaker பேசுவதற்கு வாய்ப்பு கொடுங்கள். Speaker பேசுவதற்கே வாய்ப்பு கேட்கிறமாதிரி ஆகிவிட்டது. (குறுக்கீடுகள்) தயவு செய்து உட்காருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் raise பண்ணியிருக்கிறீர்கள். அதை நான் அவைக்குறிப்பில் பார்க்கிறேன். (குறுக்கீடுகள்) அவைக்குறிப்பில் இருந்தால் அதை நான் எடுக்கிறேன். (குறுக்கீடுகள்) எடுக்கிறேன் என்று முடிவு சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) எடுக்கிறேன் என்று முடிவு சொல்லிவிட்டேன். இருந்தால் எடுக்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, இவ்வளவு நேரம் நீங்கள் எல்லாம் பேசிக் கொண்டுதான் இருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சொன்னீர்கள். அவைக் குறிப்பை நான் பார்க்க வேண்டுமல்லவா? நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். நான் பார்க்க வேண்டும். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அவைக் குறிப்பை பார்த்துவிட்டு அறிவிப்பார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பதிவு செய்யப்பட்டிருக்கிறதா என்பதை உடனடியாக பார்த்துவிட்டு அதை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருந்தால் எடுத்து விடுகிறேன் என்றுதான் சொல்கிறேன். அவைக் குறிப்பை பார்த்துவிட்டு நான் சொல்கிறேன். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள், நீங்கள் பேசுங்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பார்த்தசாரதி அவர்கள் அமர்ந்து கொண்டே குற்றச்சாட்டாகப் பேசினார். அதையும் நீங்கள் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பற்றி அவர் அமர்ந்து கொண்டு பேசினார் என்பதை நான் கவனித்தேன். (குறுக்கீடுகள்)

2015 பிப்ரவரி 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. (குறுக்கீடுகள்) அமர்ந்து கொண்டு என்னுடைய அனுமதி இல்லாமல் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கேள்வி நேரத்தில் எழுந்திருந்து உங்கள் சௌகரியத்திற்குப் பேசினால் எப்படி? (குறுக்கீடுகள்) இல்லை, அவைக் குறிப்பைப் பார்த்துச் சொல்கிறேன். நீங்கள் ஒரு point raise பண்ணியிருக்கிறீர்கள். நான் அவைக் குறிப்பைப் பார்த்து முடிவு எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, நான் முடிவெடுக்கிறேன் என்று சொல்லிவிட்டேன். நீங்கள் ஒன்று கேட்டிருக்கிறீர்கள். நான் அவைக் குறிப்பைப் பார்த்து முடிவு எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். நீங்கள் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது. நான் அவைக் குறிப்பைப் பார்த்துதான் முடிவு எடுப்பேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி, பல்லவாடா பகுதியிலே உயர் தொழில்நுட்ப ஜவுளிப் பூங்கா அமைப்பதற்காக ரூபாய் 115 கோடியிலே நடவடிக்கை எடுக்கப்பட்டது. அப்போதைய திராவிட முன்னேற்றக் கழக அரசு அதற்கு நிலம் ஒதுக்கீடு செய்ய முன்வராததால் அந்தத் திட்டம் ஈரோடு மாவட்டத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. தற்போது மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, தங்களுடைய கோரிக்கை உரிய முறையிலே ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியோடு பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.